# **DEPOSITION OF WITNESS**

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No320/2023**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : திருமதி. பிரேமா. |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.06.2024.

(A2 is present. A1, A3 are absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் வில்லுக்குறி, ஆதிதிராவிடர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் நாகர்கோவில், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இளநிலை வேலை வாய்ப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி மகேஷ் என்பவர் எனது கணவர். ஆஜர் 2 வது எதிரி என்னுடைய கணவரின் உடன்பிறந்த அண்ணன். 1 வது எதிரி என் கணவரின் உடன்பிறந்த தம்பி. 3 வது எதிரி என் கணவரின் மாமா. 31.01.2022 ம் தேதி பகல் 01.30 மணிக்கு என் கணவரை எதிரிகள் மூவரும் சேர்ந்து வெட்டிப் போட்டு விட்டார்கள். எதிரிகள் என் கணவரை பல இடங்களில் வெட்டியுள்ளார்கள். சம்பவம் நடந்த போது நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தேன். எங்கள் காலனியைச் சேர்ந்த இமானுவேல் மனைவி விஜயா என்பவர் எனக்கு தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நான் இரணியல் காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு என் கணவரை வெட்டி விட்டதாக தகவல் சொன்னேன். எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் சொல்லி என் கணவரை மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்துள்ளார்கள். என் கணவரை 1 மாதமாக மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருந்தோம். மருத்துவமனையில் இருக்கும் போது ஒரு காவலர் அங்கு வந்து என்னை விசாரித்து புகார் மனு வாங்கிச் சென்றார். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1. மருத்துவமனையில் இருந்து

28.02.2022ம் தேதி என் கணவரை சிகிச்சையில் இருந்து விடுவித்து வீட்டிற்கு வந்தோம். இன்றுவரை என் கணவர் இயற்கை உபாதைகளை தன்னிச்சையாக கழிக்க முடியாமல் மருந்து மாத்திரைகள் மூலமாக கழித்து வருகிறார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No320/2023**
**Prosecution Witness - PW2**

| | |
|---|---|
| Name | : திரு. மகேஷ். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.06.2024.

(A2 is present. A1, A3 are absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

முதல் விசாரணை–

நான் வில்லுக்குறி, ஆதிதிராவிடர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. ஆஜர் 2 வது எதிரி என்னுடைய அண்ணன். 1 வது எதிரி என்னுடைய தம்பி. 3 வது எதிரி என்னுடைய மருமகன். 31.01.2022 ம் தேதி பகல் 01.30 மணிக்கு நான் வேலை முடித்து வீட்டிற்கு வரும் போது எதிரிகள் மூவரும் சேர்ந்து நான் வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி 3 வது எதிரி என்னிடம் பேசிக் கொண்டிருந்தான். அப்போது 1 வது எதிரி அரிவாளால் என்னுடைய வலது பக்க விலாவில் வெட்டினார். அதன் பிறகு 2 வது எதிரி அரிவாளால் என்னுடைய பின்புறம் புட்டியில் (முதுகெலும்பு முடியும் இடம்) வெட்டினார். பிறகு 2 வது எதிரி என்னை தலையின் வலது பக்கம் வெட்டினார். பிறகு என்னுடைய இடது கையின் கட்டை விரலின் மேல்பகுதியில் 2 வது எதிரி வெட்டினார். பிறகு நான் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டேன். அதன் பிறகு என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றுள்ளார்கள். எனக்கு 3 நாட்களாக நினைவு வரவில்லை. என் தாயாரை என் தாயாருக்கு சொந்தமான வீட்டிலிருந்து விரட்டியதை நான் 2 வது எதிரியிடம் தட்டிக் கேட்டதால் முன்விரோதம் கொண்டு என்னை 1 வது எதிரியும், 2 வது எதிரியும்

வெட்டினார்கள். 2 வது எதிரி என்னை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாள் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த அரிவாள் சா.பொ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**